செய்தி வெளியீடு எண். 57 நாள்: 27.01.2018

## தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள ஓய்வூதிய மற்றும் ஓய்வு காலப் பயன்கள் குறித்த ஓய்வூதியதாரர்கள் முறையீட்டு மனுக்கள் இரண்டு நகல்களில் 15.02.2018 வரை வரவேற்கப்படுகிறது - மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

திருவள்ளூர் மாவட்டத்தில் பல்வேறு அரசு அலுவலகங்களில் தீர்வு செய்யப்படாமல் நிலுவையில் உள்ள ஓய்வூதிய மற்றும் ஓய்வு காலப் பயன்கள் குறித்த ஓய்வூதியதாரர்கள் முறையீட்டு மனுக்கள் இரண்டு நகல்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்களால் 15.02.2018 தேதி வரை வரவேற்கப்படுகிறது.

ஓய்வூதியதாரர்கள் தங்கள் பெயர், முகவரி, இறுதியாக பணிபுரிந்த அலுவலகம், தலைமை அலுவலகத்தின் முகவரி, ஓய்வு பெற்ற நாள், ஓய்வூதியப் புத்தக எண். கோரிக்கை எந்த அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது போன்ற விவரங்களை தங்கள் மனுவில் குறிப்பிடப்பட வேண்டும்.

இம்முறையீடுகள் ஓய்வூதியதாரர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் 20.02.2018 அன்று காலை 10.30 மணியளவில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், பரிசீலனை செய்து தீர்வு செய்யப்படுவதற்கு தடையாக உள்ள இடர்பாடுகளுக்கு முடிவு காணவும், சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கவும் இக்கூட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஓய்வூதியதார்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**